FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318702

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் VAC Year: ஆண்டு 2025 FIR No. மு.த.அ. எண் 18/2025/AC/CB Date: நாள் 09.09.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23.08.2025 Date to : நாள் வரை 08.09.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.09.2025 Time : நேரம் 07.15 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் CID Vol-III Time : நேரம் 07.15 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 17 kms, North East

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி C/o. Kondayampalayam Village Panchayat, Sulkaisomakulam Block, Coimbatore District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Vikram Raj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Manickam

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி Door No.1/31F, Anna Nagar, Kothalpalayam Vaiyampalayam Post, Annur Taluk, Coimbatore District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Muthusamy, Panchayat Secretary, Kondayampalayam Village Panchayat, Sulkaisomakulam Block, Coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Before the Hon'ble Principal District & Sessions Judge, Coimbatore

Separate Sheets Attached herewith

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Uthaya 9.9.2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 09.09.2025 @ 09.00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi,
Rank: நிலை Inspector of Police No. எண்
Vigilance and Anti-Corrupt
Coimbatore.
09.09.2025

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.18/2025/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.8318702-ன் தொடர்ச்சி.

இன்று 09.09.2025-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 07.15 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் தாலுக்கா, வையம்பாளையம் (அஞ்சல்), கோட்டைப்பாளையம், அண்ணாநகரை சேர்ந்த மாணிக்கம் என்பவரது மகன் திரு.விக்ரம் ராஜ் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் சர்கார்சாமக்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொண்டையம்பாளையம் ஊராட்சி அலுவலகத்தில் செயலாளராக பணிபுரிந்து வரும் திரு.முத்துசாமி என்பவர், புகார்தாரரின் மனைவி திருமதி.கஸ்தூரி மற்றும் மாமியார் திருமதி.தங்கம்மாள் ஆகியோரது பெயரிலுள்ள தனி மனைகளை வரன்முறைபடுத்தப்பட்ட உத்தரவுகளின் அசலை வழங்குவதற்கு ரூ.10,000/- லஞ்சம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 09.9.2025-ம் தேதி 08.00 கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.18/2025/AC/CB, u/s. 7(a)

of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேறபடி எதிரி திரு.முத்துசாமி என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்:- M. விக்ரம் ராஜ், வயது 52, த/பெ. மாணிக்கம், கதவு எண்.1/31F, அண்ணா நகர், கோட்டைப்பாளையம், வையம்பாளையம் அஞ்சல், அன்னூர் தாலுக்கா, கோயம்புத்தூர் மாவட்டம், பெறுநர்:- காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர், அம்மா / அய்யா, நான் கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் தாலுக்காவிலுள்ள கோட்டைப்பாளைத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவியின் பெயர் கஸ்தூரி. நானும் எனது மனைவியும் Paper Bag தயாரிக்கும் தொழில் செய்து வருகிறோம். எனது மனைவியின் அம்மாவின் பெயர் திருமதி.தங்கம்மாள், அவர் கடந்த 02.11.2006-ம் தேதியன்று கோவை கொண்டயம்பாளையம் கிராமத்தில் க.எண்.262/1-ல் உள்ள ஒரு லே அவுட்டில் சுமார் 1733 சதுரடி அளவுள்ள சைட் எண்.7 என்ற மனையை விலைக்கு வாங்கி அதனை பெரியநாயக்கன்பாளைம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அவரது பெயரில் ஆவண எண்.11881/2006 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் எனது மாமியார் திருமதி.தங்கம்மாள் அவர்கள், மேற்படி மனையில் ஒரு பகுதியான சுமார் 863 சதுரடி அளவுள்ள இடத்தை கடந்த 08.09.2011-ம் வருடம் அவரது மகளான எனது மனைவி கஸ்தூரிக்கு தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்து அந்த தானசெட்டில்மென்ட் சாசனமானது பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.11252/2011 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது மாமியாருக்கு சொந்தமான இடத்தில் கடந்த 2012-ம் வருடத்தில் வீடு கட்டப்பட்டு அதில் எனது மாமியார் மற்றும் மாமனார் இருவரும் குடியிருந்து வருகிறார்கள். எனது மனைவியின் பெயரிலுள்ள இடத்தில் கடந்த 2013-ம் வருடம் வீடு கட்டி அதில் நான் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். இந்நிலையில் எனது மனைவி மற்றும் எனது மாமியாரின் பெயரிலுள்ள மேற்படி வீடுகளில் Housing Loan மூலம், முதல் மாடியை கட்ட தீர்மானித்து அதுசம்மந்தமாக விசாரித்தபோது

மேற்படி மனையிடத்திற்கு DTCP அப்ரூவல் வாங்கவேண்டும் என்பது தெரியவந்தது. எனவே மேற்படி DTCP அப்ரூவல் சம்மந்தமாக கொண்டயம்பாளையம் கிராம ஊராட்சி அலுவலகத்திற்கு சென்று விசாரித்து, அங்கிருந்த பிரபு என்பவரிடம் உரிய ஆவணங்களை கொடுத்து அவர் மூலம் ஆன்லைனில் எனது மாமியார் மற்றும் மனைவியின் பெயரில் விண்ணப்பம் செய்து மேற்படி இரண்டு வீட்டு மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான அரசு கட்டணத்தை செலுத்துவதற்காக பிரபுவின் அறிவுரையின்படி, நான் கடந்த 14.05.2025-ம் தேதியன்று ரூ.20,000/-ஐ GPay மூலம் அவருக்கு அனுப்பிவைத்தேன். அதன்படி மேற்படி இரண்டு மனைகளையும் வரன்முறைப்படுத்துவதற்கான அரசு கட்டணங்கள் செலுத்தப்பட்டது. மேலும், கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக Housing Loan-ஐ பெற நான் எனக்கு தெரிந்த திரு.தீபன் என்பவரை அணுகியிருந்தேன். அவருக்கு கொண்டையம்பாளையம் ஊராட்சியின் செயலாளர் நல்ல பழக்கம் என்பதனால், அவர் சர்க்கார்சாமக்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ராமமூர்த்தி அவர்களின் ந.க.எண்.1414/2022/ஆ1 நாள் 30.07.2025-ன் படியான நடவடிக்கைகளின் மூலம் எனது மனைவி மற்றும் மாமியாரின் பெயரிலிருந்த தனிமனைகளை வரன்முறைப்படுத்தியதற்கான இரண்டு உத்தரவுகளின் Photo Copy-களை செக்ரட்டரி திரு.முத்துசாமி அவர்களிடமிருந்து பெற்று அவற்றை கடந்த 08.08.2025-ம் தேதியன்று Whats App மூலம், எனக்கு அனுப்பியிருந்தார். அவற்றை பார்வையிட்டதில் 81 சதுர மீட்டர் அளவுள்ள எனது மனைவியின் பெயரிலிருந்த தனிமனையினை வரன்முறைப்படுத்துவது சம்மந்தமான விண்ணப்பத்திற்கான பரிசீலனை/ கூராய்வு கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ஆகியவை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் எனது மாமியார் திருமதி.தங்கம்மாள் அவர்களின் பெயரிலிருந்த தனிமனையினை வரன்முறைப்படுத்துவது சம்மந்தமான விண்ணப்பத்திற்கான பரிசீலனை/ கூராய்வு கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ஆகியவைகளும் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் எனது மாமியாருக்கான

உத்தரவில் மனையின் அளவு 81 சதுர மீட்டருக்கு பதில் 162 சதுர மீட்டருக்கு அரசு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டிருந்தது. மேற்படி இரண்டு உத்தரவுகளில் எனது மாமியாரின் பெயருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தரவில் வட்டார வளர்ச்சி அலுவலரின் கையொப்பம் இருந்தது. ஆனால் எனது மனைவியின் பெயரில் வழங்கப்பட்டிருந்த உத்தரவில் வட்டார வளர்ச்சி அலுவலரின் கையொப்பம் இல்லாமலிருந்தது. மேலும், கடந்த 23.08.2025-ம் தேதி காலையில் நான் கொண்டையம்பாளையம் ஊராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த செயலாளர் திரு.முத்துசாமி என்பவரிடம் மேற்படி இரண்டு தனிமனைகளை வரன்முறைபடுத்தியதற்கான அசல் உத்தரவுகள் குறித்து கேட்டபோது அவர் மேற்படி இரண்டு உத்தரவுகளை கொடுப்பதற்கு தலா ரூ.6,000/- வீதம் மொத்தம் ரூ.12,000/-ஐ கேட்டார். அதற்கு நான், ஏற்கனவே பிரபுவிடம் ரூ.20,000/-ஐ கொடுத்துள்ள விபரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் அது அரசு கட்டணம் என்றும் மேற்படி வரன்முறைப்படுத்தப்பட்ட உத்தரவுகளை கொடுப்பதற்கு தனக்கு தனியாக ரூ.12,000/- கொடுக்கவேண்டும் என்று சொன்னார். நானும் பார்க்கலாம் சார் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். அதன்பின்னர், நான் கடந்த 28.08.2025-ம் தேதி மதியம் சுமார் 12.45 மணியளவில் என்னுடைய செல்நம்பரான 8248379412-லிருந்து பஞ்சாயத்து செக்ரட்டரி திரு.முத்துசாமி என்பவரின் செல்நம்பரான 8526450907-க்கு அழைத்து மேற்படி வரன்முரைப்படுத்தப்பட்ட உத்தரவுகள் குறித்து கேட்டபோது அவர் ரூ.12,000/-ஐ தன்னிடம் கொடுத்துவிட்டு வாங்கிக்கொள்ளும்படி தெரிவித்தார். அதற்கு நான் எனது மாமியாருக்கான கட்டணத்தில் அதிகமாக குறிப்பிட்டுள்ளது குறித்து கேட்டபோது எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்தார். அவர் கேட்டிருந்த ரூ.12,000/-ல் ஏதாவது கம்மிபண்ணமுடியமா என்று நான் கேட்டபோது, செக்ரட்டரி திரு.முத்துசாமி அவர்கள், இரண்டு விண்ணப்பங்களுக்கும் சேர்த்து ரூ.2,000/- குறைத்து ரூ.10,000/-ஐ கொடுத்து வரன்முறைப்படுத்தப்பட்ட உத்தரவுகளை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார். அதன்பிறகு, நான் மீண்டும் 29.08.2025-ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் மேற்படி செக்ரட்டரி திரு.முத்துசாமி அவர்களை

தொடர்புகொண்டு வரன்முரைப்படுத்தப்பட்ட உத்தரவுகளை குறித்து கேட்டபோது, செக்ரட்டரி திரு.முத்துசாமி அவர்கள் மேற்படி இரண்டு உத்தரவுகளும் ரெடியாக இருப்பதாகவும் அவர் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு அவற்றை வாங்கிக்கொள்ளும்படி தெரிவித்துவிட்டு போனை கட்செய்துவிட்டார். அதன் பிறகு எனது சொந்த வேலையில் நான் பிசியாக இருந்துவிட்டேன். அதன்பிறகு, நான் மீண்டும் 08.09.2025-ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நான் கொண்டையம்பாளையம் ஊராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த செயலாளர் திரு.முத்துசாமி அவர்களை நேரில் சந்தித்து, மேற்படி இரண்டு உத்தரவுகளில் எனது மனைவின் பெயரிலிருந்ததில் வட்டார வளர்ச்சி அலுவலரின் கையொப்பம் இல்லாதது குறித்து கேட்டபோது அவர், அதெல்லாம் வாங்கியாச்சு என்றும், தான் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு மேற்படி இரண்டு தனிமனைகளின் வரன்முறைபடுத்தியதற்கான உத்தரவுகளை பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்தார். உடனே நான் எப்போது வரட்டும் என்று கேட்டதற்கு அவர் பணத்துடன் நாளைக்கு வாங்க என்று தெரிவித்து என்னை அனுப்பிவிட்டார். நானும் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். நான் வீட்டிற்கு சென்று யோசித்துப்பார்த்ததில் எனது மனைவி கஸ்தூரி மற்றும் எனது மாமியார் திருமதி.தங்கம்மாள் ஆகியோரது பெயரிலுள்ள தனிமனைகளின் வரன்முறைப்படுத்தப்பட்ட உத்தரவுகளை பெறுவதற்கு கொண்டையம்பாளையம் ஊராட்சியின் செக்ரட்டரியான திரு.முத்துசாமி அவர்களுக்கு லஞ்சமாக ரூ.10,000/- கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே மேற்படி செக்ரட்டரி திரு.முத்துசாமி என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இடம்: கோவை, நாள்: 09.09.2025, இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள sd.XXXXX 09.09.2025 (M.Vikram Raj). Respected Madam, Received the complaint on 09.09.2025 at about 07.15 hrs. sd.XXXXX, 09.09.2025, Inspr., V&AC, CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.18/2025/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 09.09.2025 at about 08.00

hrs. sd.XXXXX, 09.09.2025, Inspr., V&AC, CBE. இம்முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.